**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.472/2010**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 14 |
| Name | : Jothilingam |
| Father's Name | : Maruthamuthu |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2019.

**முதல் விசாரணை.**

நான் கள்ளக்குறிச்சியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு குறித்து எனக்கு 2008 லிருந்து தெரியும். நானும் என்னுடைய இரு நண்பர்களும் வெளிநாடு செல்வதற்காக வேலுமணி என்பவரிடம் ரூ.2,13,000/- த்தை துபாய் செல்வதற்காக விசா எடுத்து தருகிறேன் என்று கூறியதின் அடிப்படையில் அவரிடம் பணத்தை 2008 ல் கொடுத்தேன். அன்றைய தினத்திலிருந்தே என்னிடம் துபாய் செல்வதற்கான விசா எடுத்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு தராமல் ஏமாற்றி கொண்டிருந்தார். எனக்கு நகல் விசா ஒன்று கொடுத்தார். அந்த நகல் விசாவிற்கு தொகையை தவணை முறையில் ரூ.50 ஆயிரம், 50 ஆயிரம் என்றும் மீதியை ரொக்கமாக கொடுத்தேன். வேலுமணி என்பவர் விசா எடுத்து கொடுக்காத காரணத்தினால் நான் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது காவல் நிலையத்தில் சிபிசிஐடி போலிசார் ஏற்கனவே இதுபோன்ற வழக்கு சம்மந்தமாக வேலுமணி என்பவரை கைது செய்து விசாரித்து வருவதால் அங்கு சென்று கொடுக்கும்படி கூறினார்கள். ஆதலால் நான் சென்னைக்கு வந்து சிபிசிஐடி போலிசிடம் இது சம்மந்தமாக புகார் ஒன்றை கொடுத்தேன். நான் புகார் கொடுத்ததன் அடிப்படையில் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. சைதாப்பேட்டை நீதிமன்றதில் ஒவ்வொரு முறையும் கள்ளக்குறிச்சியிலிருந்து வரமுடியாத காரணத்தினால் வழக்கை திரும்ப பெறுமாறு கேட்டுக் கொண்டதன் பேரில் எனக்கு வேலுமணி அங்கு ரூ.50,000/- பணம் கொடுத்து வழக்கு திரும்ப பெறப்பட்டது. நான் என்னுடன் வெளிநாட்டிற்கு வருவதற்காக என்னுடைய இரு

நண்பர்களுக்கான தொகையை என்னடைய வீட்டை விற்று தான் செலுத்தினேன். இதே போன்று நான் இருக்கும் கள்ளக்குறிச்சியில் வேலுமணி நிறைய பேரிடம் ஏமாற்றியுள்ளார். எனது நண்பரான பச்சைமுத்து என்பரின் மூலம் தான் வேலுமணியை எனக்கு தெரியும். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

அவர் என்னிடம் நேரடியாக தான் பணம் வாங்கினார். அவர் என்னிடம் நேரடியாக பணம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தவணை முறையில் எனது பணத்தினையும், எனது நண்பர்கள் பணத்தினையும் தான் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததற்கான வழக்கு தான் சைதாப்பேட்டை நீதிமன்தற்தில் முடிக்கப்பட்டது. இந்த வழக்கிற்கும் நான் பணம் கொடுத்ததற்கும் தொடர்பில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை. எதரி என்னிடம் பணம் எதுவும் கேட்கவில்லையென்றும் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றோ நான் எனது நண்பர்களிடம் பெற்ற தொகையினால் தான் நானே அதை தீர்த்து வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை போலிசார் என்று விசாரித்தார்கள் என்று சரியாக நியாபகமில்லை. எனக்கு ஏற்கனவே அரபு நாடுகளுக்கு சென்று பணி புரிந்ததால் பாஸ்போர்ட் இருந்தது. ஆகையால் நான் புதிதாக எதிரியின் மூலம் வெளிநாடு செல்ல விசா எதுவும் பெறதேவையில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.